

சிவஞானபோதம்

நூற்பாக்கள் தெளிவுரை



குருமகா சன்னிதானம், த.மா.வெ. அவர்களுக்கு
சைவத் தமிழ் சீராளர் விருது வழங்கியருளல்

பேரா. தா.ம.வெ.யின் முத்து விழா

24-08-2007

உ
சிவமயம்

சிவஞான போதம் நூற்பாக்கள் தெளிவுரை

திருவாவடுதுறை ஆதீனப் புலவர்

நா.ம. வெள்ளைவாரணம்

எழுதியது

எங்கள் வித்யாகுரு

மதுரகவி **நா.ம. வெள்ளைவாரணம்**

அவர்களின்

முத்துவிழா *(24.8.2007)*

ஞானதானத்தொண்டு

சீனு. அருணாசலம், அமைப்பாளர்,
திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், சிதம்பரம் - 608 001.
போன்: 04144-231166

பதிப்புரை

''சிவஞான போதம் - நூற்பாக்கள் தெளிவுரை'' என்னும் இந்நூல் திருவாவடுதுறை ஆதீனப் புலவர் திரு. தா.ம. வெள்ளை வாரணம் அவர்களால் எழுதப்பெற்றது.

இவர்கள் திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத்தின் திருவாரூர், சீர்காழி, சிதம்பரம் கிளை மையங்களின் பேராசிரியராகப் பணியாற்றித் தற்போது கும்பகோணம், சிதம்பரம் கிளை மையங்களில் பேராசிரியராக பணியாற்றி வருகிறார்கள். இவரது சாத்திர அனுபவத்தாலும் மாணவர்களுக்கு எளிதில் புரியுமாறு போதிக்கும் திறமையாலும் இந்நூல் உருவாகி உள்ளது.

எங்கள் வித்யாகுருவின் எண்பதாம் அகவை நிறைவு ஆகிய முத்து விழாவில் (24.8.2007ல்) திருவருள் துணையும் குருவருள் துணையும் கொண்டு இந்நூல் வெளிவருகிறது.

விழா நாயகர் எங்கள் பேரராசானும், துணைவியாரும் நீடு வாழ்க.

இந்நூலை 10,000 படிகள் அச்சிட்டு வழங்க எங்கள் பெருமை மிகு மாணவர்கள் கயிலைமாமணி டாக்டர். ஏ. கிருஷ்ணமூர்த்தி (RMMC) அண்ணாமலை பல்கலைக் கழகம் அவர்களும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன பொறியாளர்கள் கயிலைமாமணிகள் Er. பெ. இராதா கிருஷ்ணன் & Er. ந. கார்த்திகை அவர்களும் பொருளுதவி செய்துள்ளார்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிதம்பரம்
8.8.2007

இங்ஙனம்
சீனு. அருணாசலம்

முன்னுரை

மெய்கண்ட சாத்திரங்களும், பண்டார சாத்திரங்களும் சைவசித்தாந்த கோட்பாடுகளை விளக்கும் நூல்கள். இவற்றுள் மெய்கண்டார் அருளிய சிவஞான போதம் தலையாய நூல். இந்நூலைச் சைவசித்தாந்தம் பயில்வோர் இன்றியமையாது கற்றல் வேண்டும். இதற்குப் பலர் உரை எழுதி உள்ளனர். இவ்வுரை நூல்களில் முடிமணியாகத் திகழ்வது திருவாவடுதுறை ஆதீன முனிபுங்கவர்களில் ஒருவரான மாதவச்சிவஞான சுவாமிகள் எழுதிய மாபாடியம் ஆகும். இன்னோரன்ன உரை நூல்களைப் பயில்வோர் நிகண்டு கற்று இலக்கிய இலக்கணப் புலமை பெற்றவராதல் வேண்டும்.

ஆயினும் சாமான்யரும் அறிந்து கொள்ளும்படி சிவஞான போத நூற்பாக்களுக்கு மட்டும் தெளிவுரை எழுதும்படி சிதம்பரம் திரு. சீனு. அருணாசலம் அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். அதன் வண்ணம் சித்தாந்தம் பயிலத் தொடங்குவோருக்கு ஒரு கை ஏடாக அமையும்படி சிவஞானபோத நூற்பாக்களுக்கு மட்டும் தெளிவுரையும் அருஞ்சொல் விளக்கமும் எழுதி அடியேன் அளித்தேன்.

"சிவஞான போதம் நூற்பாக்கள் தெளிவுரை" என்னும் பெயருடன் அந்நூல் இப்போது வெளிவருகிறது.

சைவசித்தாந்தம் பயிலும் முதல் நிலையாளர்களும் சாமான்யரும் இந்நூலைப் பயின்று வந்தால், இந்நூல் விரிவான உரை நூல்களையும் பயிலவேண்டும் என்னும் ஆவலைத் தூண்டும் என்பது அடியேனது துணிபு. பலரும் இந்நூலைப் பயின்று பயனடைய வேண்டுகிறேன்.

18, சிவன் தெற்கு வீதி
பொறையாறு 609 307

25.6.2007

இங்ஙனம்
தா.ம. வெள்ளைவாரணம்
திருவாவடுதுறை ஆதீனப் புலவர்.
அலைபேசி: *9443806991*

2·5

சிவஞான போதம்

நூற்பாக்கள் தெளிவுரை

1. பிரமாண இயல்

முதல் நூற்பா — பதி உண்மை

அவன்அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

தெளிவுரை: உலகத்தொகுதியானது அவன், அவள், அது என மூன்று பகுதிகளாகச் சுட்டி அறியப்படுவதோடு தோன்றல், நிற்றல், ஒடுங்கல் என முத்தொழிற்படுகிறது. ஆதலால் அது ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருளே ஆகும். மேலும் அந்த உலகத்தொகுதி தன்னை ஒடுக்கினவனான கடவுளிடத்து உள்ளதாகும். பின்பு உயிரின் ஆணவமலம் தீர்தல் பொருட்டுத் தோன்றி உள்ளதாகும். இங்ஙனம் உலகத்தொகுதியை ஒடுக்கின சங்கார காரணனே முழுமுதற்கடவுள் ஆவான். (இவ்வாறு அறிவுடையோர் கூறுவர்)

அருஞ்சொல் விளக்கம்: அவை - உலகத்தொகுதியான கூட்டம். மூவினை - தோன்றல், நிற்றல், ஒடுங்கல் என்னும் முத்தொழில். திதி - உள்பொருள். ஒடுங்கி - ஒடுக்கின முதல்வன். அந்தம் - ஒடுக்கின சங்கார காரணன். ஆதி - முழுமுதல் கடவுள்.

இரண்டாம் நூற்பா — பாச உண்மை

அவையே தானே யாய் இருவினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

தெளிவுரை: நிமித்த காரணன் ஆகிய கடவுள் உயிரோடும் உலகோடும் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்பான். தனது ஆணையாகிய சிற்சத்தியால் உயிர்களிடத்து அவ்வவற்றின் இருவினைகளைச் செலுத்துவான். தனது சிற்சத்தியால் உயிர்களை இருவினைகளுக்கு ஏற்பப் பிறப்பு இறப்புப் புரியச் செய்வான். இங்ஙனம் உயிர்கள் பிறப்பு இறப்புப் புரியும் பொருட்டு அநாதி காலமாகவே தனது சிற்சத்தியை விட்டுப் பிரியாது இருப்பான்.

அருஞ்சொல் விளக்கம்: அவையே தானேயாய் என்பதை இரட்டுற மொழிதல் என்ற உத்தியால் அவையே யாய், தானேயாய், அவையே தானேயாய் எனப் பிரித்துக்கொள்க. அவையேயாய் என்பது ஒன்றாதல். தானேயாய் என்பது வேறாதல். அவையே தானேயாய் என்பது உடனாதல். இருவினை - உயிர்செய்த நல்வினை தீவினைகள். போக்கு - இறத்தல், வரவு - பிறத்தல். ஆணை - இறைவனது சிற்சத்தி. அன்றே - அநாதி காலமாகவே.

மூன்றாம் நூற்பா — பசு உண்மை

**உளது இலது என்றலின் எனது உடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படின்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.**

தெளிவுரை: *(1)* "உயிரென்ற ஒன்று இல்லை" என்று கூறுகிற அறிவு இருப்பதால் உயிர் உள்ளது என்று அறியப்படும். (2) எனது உடல் என்று கூறும் போது எனது என்பது உடம்புக்கு வேறாதலால் உடம்புக்கு வேறாய் உயிர் உள்ளது என்பது அறியப்படும். (3) பொறிகள் ஒவ்வொன்றையே அறிதலாலும் ஐந்து புலனையும் அறிகிற பொருள் வேறாய் இருத்தலாலும் பொறிகளுக்கு வேறாய் உயிர் உள்ளது என்பது அறியப்படும். (4) அவத்தைகளில் ஒடுங்கிச் சூக்கும தேகத்தோடு கண்ட கனவை நனவில் அறிகிற பொருள் இருத்தலால் சூக்கும தேகத்துக்கு வேறாய் உயிர் உள்ளது என்பது அறியப்படும். (5) ஒடுங்கின சுழுத்தியாகிய உறக்க நிலையில் பிராணவாயு இருந்தும் உடலுக்கு இன்பத் துன்ப நுகர்வும் செயற்பாடும் இல்லை. ஒடுங்காத சாக்கிரமாகிய நனவு நிலையில் உடலுக்கு இன்பத் துன்ப நுகர்வும் செயற்பாடும் உள்ளன. எனவே பிராண வாயுவுக்கு வேறாக உயிர் உள்ளது என்று அறியப்படும். (6) உயிர் உணர்த்த உணர்வது. பிரமம் உணர்த்த வேண்டாமல் தான் இருந்தபடியே எல்லாவற்றையும் ஒருசேர உணர்வது. எனவே பிரமத்துக்கு வேறாக உயிர் உள்ளது என்பது அறியப்படும். (7) மாயா காரியமான உடம்பு தத்துவங்களின்

சமுதாயமாக இருந்தாலும் அந்தத் தத்துவங்கள் சித்தமும் சித்தப்பகுதியும் ஆன ஐந்து கந்தங்கள் போல வெவ்வேறு பெயர் பெறுகின்றனவேயன்றி உயிர் என்று பெயர் பெறவில்லை. மற்றும் தத்துவம் பல கூடிய சமுதாயம் தனு என்று பெயர் பெறுகிறதேயன்றி உயிர் எனப்பெயர் பெறவில்லை. எனவே தத்துவங்களுக்கு வேறாக உயிர் உள்ளது என்பது அறியப்படும். அந்த உயிர் எங்குள்ளது என்றால் மாயா இயந்திர தனுவில் உள்ளது.

அருஞ்சொல் விளக்கம்: இலது - சூனியம். ஐம்புலம் - ஒடுக்கம் அறிதலின் என்பதை ஐம்புலம் அறிதலின் ஒடுக்கம் அறிதலின் என்று இரண்டாகப் பிரிக்க வேண்டும். ஐம்புலம் - ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற உணர்வுகள். ஒடுக்கம் - கனவு நிகழ்ந்த இடமான கண்டத்தானத்தில் நடந்த நிகழ்ச்சி. உண்டி - இன்பத்துன்ப நுகர்வு. வினை - தொழிற்பாடு. உணர்த்த உணர்தல் - கருவிகள் உணர்த்துவதால் உயிர் உணர்தல். மாயா - மாயா காரியம். இயந்திரம் - சூத்திரப் பாவை. தனு - உடம்பு.

இலக்கணவியல்

நான்காம் நூற்பா — பசு இலக்கணம்

அந்தக் கரண மவற்றின் ஒன்று அன்று அவை
சந்தித்தது ஆன்மா சகசமலத்து உணராது
அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சவத்தைத்தே

தெளிவுரை: மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அந்தக்கரணங்களில் யாதொன்றும் உயிர் அன்று. அரசன் தனக்கு ஆராய்ச்சித் துணையாக அமைச்சரோடு கூடி ஆட்சி புரிவது போல ஆணவமலப் பிணிப்பால் அறிவில்லாத உயிர் சிறப்பு வகையான் உணர்வதற்காக அந்தக் கரணங்களோடு கூடி ஐந்து அவத்தைகளை உடையதாகும்.

அருஞ்சொல் விளக்கம்: அந்தக்கரணம் - மனம் முதலிய உட்கருவிகள். அவை என்றது அந்தக்கரணங் களைச் சுட்டியது. சந்தித்தது - கூடிஇருப்பது. சகசமலம் - அநாதியே உயிரோடு இயைந்த ஆணவமலம். அமைச்சு அரசு ஏய்ப்ப - ஆராய்ச்சிக்குத் துணையான அமைச்சரும் ஆட்சி புரியும் அரசனும் போல. அஞ்சு அவத்தை - சாக்கிரம், சொர்ப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து நிலைகள்.

ஐந்தாம் நூற்பா — பாச இலக்கணம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்து அறிந்து அறியா ஆங்கவை போலத்
தாம்தம் உணர்வின் தமிஅருள்
காந்தம் கண்ட பசாசத் தவையே.

தெளிவுரை: உயிரினால் மெய், வாய், கண், மூக்குச் செவி என்ற ஐந்து பொறிகளும் ஐந்து புலன்களை அளவிட்டு அறியும். ஆனாலும் அங்ஙனம் அறிந்த தம்மையும், தமைச் செலுத்திய உயிரையும் அறியமாட்டா. அதுபோல உயிர்கள் தம் அறிவுக்குத் துணையாகிய

சிற்சத்தியால் அவத்தைகளில் தம் வினைப் பயனை அறியும். ஆனாலும் தம்மையும் தம்மைச் செலுத்திய சிற்சத்தியையும் அறியமாட்டா. இங்ஙனம் உயிர்கள் அறியும் போது, காந்தத்தின் சந்நிதியில் இரும்பு இழுத்துக்கொள்ளப் படுவது போல, உயிர்கள் இறைவனது சந்நிதி மாத்திரையில் அறியும். இரும்பை இழுப்பதால் காந்தம் விகாரப்படாததைப் போல, உயிரை அறிவிப்பதால் இறைவன் விகாரப்படுவதில்லை.

அருஞ்சொல் விளக்கம்: விளம்பிய - முன் நூற்பாவில் கூறப்பட்ட. உள்ளம் - உயிர். உள்ளத்து - உயிரினால். இங்கே மெய், வாய், கண், மூக்கு என்று நான்கு பொறிகள் மட்டும் கூறப்பட்டிருந்தாலும் செவி என்பதையும் கூட்டி ஐம்பொறிகளாகக் கொள்ள வேண்டும். தாம் என்றது உயிர்கள். தமி - இறைவன். அருள் - சிற்சத்தி. அளந்து அறிந்து அறியா என்ற தொடரை இரட்டுறமொழிதலால் தாம் தம் உணர்வின் என்பதன் பின்னும் கூட்டிப் பொருள்கொள்ள வேண்டும். பசாசம் - இரும்பு.

ஆறாம் நூற்பா — பதி இலக்கணம்

உணர் உரு அசத்து எனின் உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத்து ஆம்என
இருண்டு வகையின் இசைக்கும் மன் உலகே.

தெளிவுரை: முழுமுதற் கடவுள் சுட்டி அறியப்படும் பொருள் என்றால் உலகத்தொகுதிபோல அழிபொருளாகி அசத்தாய் முடியும். இனி எவ்வாற்றானும் அறியப்படாத பொருள் என்றால் முயற்கொம்பு போல இல்பொருளாகி

முடியும். எனவே சுட்டி அறியப்படுவதும் எவ்வாற்றானும் அறியப் படாததும் ஆகிய இவ் இருவகையும் ஆகாமல் ஒருவாற்றான் அறியப்படுவதும் மற்றொருவாற்றான் அறியப்படாததும் ஆகிய இரண்டு வகையினையும் உடையது சிவசத்தாகிய முழுமுதற்கடவுள். இவ்வாறு மெய்யுணர்வுடையோர் கூறுவர்.

அருச்சொல் விளக்கம்: உணர் உரு - சுட்டி உணரும் பொருள். உணர்உரு எனின் அசத்து என மாறிக்கூட்டுக. எனின் என்பதை உணராது என்பதன் பின்னும் கூட்டுக. இருதிறன் - சுட்டி அறியப்படுதல், அறவே அறியப்படாமை என்ற இருதன்மை. இரண்டு வகை - சிவஞானத்தால் அறியப்படுதலும். பசுஞான பாசஞானங்களால் அறியப்படாமையும் ஆகிய இருவகை. உலகு - அறிவுடையோர்.

சாதனவியல்

ஏழாம் நூற்பா — சாதகன் இயல்பு

யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்துஇலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா.

தெளிவுரை: சத்துக்கு எதிரான அசத்துப் பொருள் எல்லாம் அழிந்துபடுகிற சூனியம் ஆகும். ஆகவே சத்தாகிய சிவம் அசத்தாகிய உலகத்தொகுதியை அறிய

வேண்டியதில்லை. அசத்தாகிய உலகத் தொகுதி சடம் ஆகலின் சத்தாகிய சிவத்தை அறியாது. எனவே, சத்து அசத்து ஆகிய இரண்டையும் அறியக்கூடிய அறிவுடைப் பொருள் ஒன்று உள்ளது, என்பது பெறப்படும். அப்பொருள் சத்து ஆதலும், அசத்து ஆதலும் ஆகிய இரண்டு தன்மையும் அல்லாததாய்ச் சத்து அசத்து ஆகிய இரண்டையும் அறிகிற சதசத்தாகிய உயிராகும்.

அருஞ்சொல் விளக்கம்: சத்தெதிர் யாவையும் சூனியம் என மாறிக்கூட்டுக. சத்தெதிர் என்றது சத்துக்கு எதிரான அசத்துப்பொருள். சத்து என்றது சிவம். சத்தெதிர் என்றது உலகத் தொகுதி. இரண்டு அலா என்பதில் இரண்டு என்றது சத்து அசத்து என்ற இரண்டு, அதாவது சிவமும் உலகத்தொகுதியும். இருதிறன் - சத்தின் தன்மை அசத்தின் தன்மை.

எட்டாம் நூற்பா — சாதனப் பயன்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

தெளிவுரை: உயிரானது முற்பிறப்பில் செய்த புண்ணிய வசத்தால், உள்நின்று உணர்த்தி வந்த பரம்பொருள் குருவாக எதிரே வந்து, "அரசகுமாரனாகிய நீ ஐம்புலன்களாகிய வேடரின் வசப்பட்டு வளர்ந்து உன்பெருமையை மறந்து மயங்கினாய்" என்று அறிவுறுத்திய அளவில் ஐம்புலவேடரை விட்டு நீங்கிப்

பரம்பொருளான அரனுக்கு வேறாதல் இன்மையால் அப் பரம்பொருளின் திருவடியை அடையும்.

அருஞ்சொல் விளக்கம்: ஐம்புலன் என்பதை ஐம்பொறிகள் என்பதாகப் பொருள் கொள்க. ஐம்புலன்களை வேடராக உருவகித்ததால் உயிரை அரச குமாரனாகவும் இறைவனை அரசனாகவும் உருவகித்துக் கொள்க.

ஒன்பதாம் நூற்பா — சாதிக்கும் முறை

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக்கண்ணினில் சிந்தை நாடி
உராத் துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்நிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே.

தெளிவுரை: அந்தக்கரணத்தால் விளைந்த பசுஞானத் தாலும், பொறிகளால் உணர்ந்த பாசஞானத்தாலும் அறிய முடியாத முழுமுதற் கடவுளை உயிரானது, திருவடி ஞானமாகிய பதிஞானத்தால் தனது அறிவிலே நாடுக. "தத்துவக் கூட்டமான பாசமானது பேய்த்தேரான கானல் நீரைப்போல அழியக் கூடியது" என்று அறிந்து உயிரானது பாசத்தை நீக்கும். நீக்கவே உயிருக்கு உதவிவந்த திருவடி ஞானமே பிறவித் துன்பமான வெப்பத்தைத் தணிக்கிற குளிர் நிழலாக அமையும்.

திருவடி ஞானத்தால் கண்டு கொண்ட சிவக்காட்சி நீங்காமல் இருப்பதற்கு உயிரானது திருவைந்தெழுத்தை விதிப்படி எண்ணுவதாக.

அருஞ்சொல் விளக்கம்: ஊனக்கண் - குறை அறிவான பசுஞானம். பாசம் - பாசஞானம். பதி - முழுமுதற் கடவுள். ஞானக்கண் - திருவடி ஞானம். நாடி - நாடுக. உராத்தேர் துனைத் தேர் எனக்கூட்டுக். உராத்தேர் - மக்களால் ஊர்ந்து செல்லப்படாத பேய்த் தேர். துனைத் தேர் - விரைந்து ஓடும் தேர். தேர்த்து என - தேரைப்போல. அதாவது கானல் நீர் உண்ணத் தக்க நீரைப் போல் காட்சி அளித்து விரைந்து ஒன்றுமில்லாததாய் மறைந்து விடுவது போல. பதி - திருவடிஞானம். எண்ணும் - எண்ணுக.

பத்தாம் நூற்பா — மல நீக்கம்

அவனேதானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலம் மாயை தன்னொடு வல்வினை இன்றே.

தெளிவுரை: முதல்வனே பெத்தநிலையில் உயிரோடு உடனாய் நின்று உயிர் அறியும்படி தான் அறிந்தபோது, "முதல்வன் உள்நின்று உதவுகிறான்" என்பதை உயிர் அறியாதபடி அவ்வுயிரோடு அவன் ஒன்று பட்டு நின்ற முறையை போல, முத்திநிலையில் அவனோடு உடனாய் நின்று உயிர் இன்புறும் போது, உயிர் தன்னை அறியாமல் முதல்வனோடு ஒன்றுபட்டு நின்றபடியே இறைபணியில் நின்றால் ஆணவம் மாயை என்ற மலங்களோடு கன்ம மலமும் இல்லாது நீங்கும்.

அருஞ்சொல் விளக்கம்: அவனே - இறைவனே. தானே - உயிர். அந்நெறி - அந்த முறைப்படி. ஏகனாதல் - உயிர்

இறைவனோடு உடனாய் நின்று இன்புறும் போது தன்னை உணராமல் இறைவனோடு ஒன்று பட்டு நிற்றல். இறைபணி நிற்றல் - அதிகாரியானவன் அரசனின் ஆணைவழி ஒழுகுவது போல உயிர் எதையும் தன்செயலாக எண்ணாமல் இறைவன் ஆணை வழி ஒழுகுதல்.

பதினொன்றாம் நூற்பா — சிவத்துவப் பேறு

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

தெளிவுரை: காணும் இயல்புடைய கண்ணுக்கு அது காணும்படி கண்ணோடு உடனாய் நின்று கண்டு, வேறாய் நின்று காட்டுகிற உயிரைப் போல, உணர்த்த உணரும் இயல்புடைய உயிருக்கு அவ் உயிர் உணரும்படி முதல்வன் அவ் உயிரோடு உடனாய் நின்று தானும் கண்டு, வேறாய் நின்று காட்டுவான். அதனால் அந்த அத்துவித நிலையை மறவாமல் செலுத்துகிற அன்பினால் முதல்வனது திருவடியாகிய பேரின்ப அனுபவத்தை உயிர் பெறும்.

அருஞ்சொல் விளக்கம்: உளம் - உயிர். கண்டு காட்டலின் என்ற தொடரில் இறைவனது காணும் உபகாரமும் காட்டும் உபகாரமும் குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளன. அயரா அன்பு - மறவாத அன்பு. அரன் கழல் - வீடுபேறாகிய பயன்.

பன்னிரண்டாம் நூற்பா — சீவன்முத்தர் செயல்

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே.

தெளிவுரை: அயரா அன்பினால் அரன் கழலைக் கூடிய (மெய்ஞ்ஞானியாகிய சீவன் முத்தன் வாசனா மலத்தால் புறம்போகும் போது) செந்தாமரை போன்ற குளிர்ச்சியும் உயிர்களைத் தாங்கும் வலிமையும் உடைய திருவடிகளை நினைய ஒட்டாமல் தடுக்கிற மும்மல அழுக்கை ஞான நீரால் கழுவிய மெய்ஞ்ஞானி ஆகிய அன்பரோடு கூடி மலமயக்கம் நீங்கும் பொருட்டு பேரன்பு நிறைந்த அடியாரின் திருநீறு உருத்திராக்கமாகிய திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனே என்று பாவித்து வழிபடுவான்.

அருஞ்சொல் விளக்கம்: செம்மலர் - தாமரை மலர். ஈண்டு அதன் குளிர்ச்சியைக் குறித்தது. நோன் தாள் - அனைத்து உயிரையும் தாங்குகிற ஆற்றலுடைய திருவடி. கழீஇ - மலமாசு தீர்ந்த மெய்ஞ்ஞானி. மரீஇ - கூடி. நேயம் மலிந்தவர் - அன்பு நிறைந்த சிவனடியார். வேடம் - திருநீறும் உருத்திராக்கமும் தரித்த கோலம்.

அச்சிட்டோர்: வேல்ராஜ் சிதம். ✆ 225426, 99600-45082

எண்பதாம் அகவை முத்து விழா



பேராசிரியர் தா. ம. வெள்ளைவாரணம்
திருமதி விசாலாட்சி அம்மாள்

சோழபுரம் செட்டியார் மரபில் 06-09-1927ல் குடந்தையில் தோன்றி அங்கேயே நகராட்சி, சிறுமலர் உயர்பள்ளிகளில் கற்று, பின் மாயூரம் மெய்கண்டார் தமிழ் கல்லூரி, திருப்பனந்தாள் செந்தமிழ் கல்லூரியில் பயின்று சென்னை பல்கலைக்கழக வித்துவான் பட்டம் 1949-ல் பெற்றார்கள். 1950 முதல் 1985 வரை 35 ஆண்டுகள் திருப்பனந்தாள் செந்தமிழ் கல்லூரியில் பேராசிரியர் பணி. திருமுறைச் செல்வர், மதுரகவி, சைவத்தமிழ்மணி, துறைசை ஆதினப்புலவர், தொல்காப்பியச் செம்மல், சைவத்தமிழ் சீராளர் இன்னபிற பட்டங்கள் சூட்டப் பெற்றார்.

திருவிடைமருதூர், சிதம்பரம், நெய்வேலி, செம்பொன்னார்கோயில், புதுச்சேரிகளில் தொடர் சமய சொற்பொழிவுகள்: சிதம்பரம், திருவாரூர், சீர்காழி, குடந்தையில் தொடர் சித்தாந்த பயிற்சி விரிவுரைகள். கோவை, மாயூரம், கள்ளக்குறிச்சி, காரைக்கால் நகரங்களில் சிறப்புப் பொழிவுகள். தலைப்பைத் தாண்டாமல், குறித்த நேரத்தில் நிறைவான செய்திகளை தங்குதடையின்றி கனினிபோல் தொகுத்து, பகுத்து, விளக்கமாக கூறி ஆர்வலர் சோர்வடையாவண்ணம் தன்னுடன் வழிநடத்திச் செல்லும் பாங்கு இவருக்கே உள்ள சிறப்பு. சுவைஞர்கள் நிறைந்த இவரின் அவைகளே சான்று பகரும்.

இவர் புகழ்பூத்த தொண்டு வாழ்வு வருநூறு ஆண்டுகள் தொடர எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனை இறைஞ்சுகின்றோம்.

- தில்லை சீனு. அருணாசலம்

வேல்ராஜ் - சிதம் © 2225426